ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1520 - 2007 ඔක්තෝබර් 19 වැනි සිකුරාදා - 2007.10.19
*1520 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 932 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 932 |

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 26 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒற்றோபர் 12 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் வெற்றிடம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

**இரத்துச் செய்தல்**

என்னால் வெளியிடப்பட்ட கண்டி மாவட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | வர்த்தமானி இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| கண்டி | பாத்ததும்பறை | பள்ளேகம்பக கிழக்கு பிறப்பு இறப்பு மற்றும் பாத்ததும்பறை விவாக பதிவாளர் பதவி | 1400 2005.07.01 |

10–477

திருத்தம்

**திறமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குதல் – 2007 மறுசீரமைப்பு**

2007.09.07 ஆந் திகதிய 1514 ஆம் இலக்க மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2007.10.26 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கிறேன்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2007 ஒற்றோபர் 04.

10 – 690

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு**

நீர்ப்பாசனத் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் தொகுதி II "ஆ" வின் வேலை மேற்பார்வையாளர் பதவிகள்**

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II தொகுதி "ஆ" வின் வேலை மேற்பார்வையாளர் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2007.11.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் உள்ளடக்கப்பட்டு அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வேலை மேற்பார்வையாளர் பதவிகள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இத்திகதிக்கு பின்னராக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- பயிற்சி காலப்பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் இப்பதவிக்குரிய திரட்டிய மாதச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறாகும் :-

ரூபா 14,140 - 10 x 140 - 11 x 150 - 6 x 210 - 14 x 290 - ரூபா 22,510 (மூன்றாம் ஆண்டு சம்பள படிநிலைக்கு முன்னர் முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

பயிற்சி பெறும் காலப்பகுதியில் மாதம் ரூபா 12,920 - 1 x 120 - ரூபா 13,040 செலுத்தப்படும்.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**-(அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாகவும் உடல் தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 2007.11.30 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (மாகாணம் மற்றும் அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தொடர்பில் இவ் உயர்மட்ட வயதெல்லை ஏற்புடையதாகாது).

(இ) சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) I. வெளிவாரி விண்ணப்பதாரிகளின் பொருட்டு -

I.I பயிற்றுவிக்கும் தரத்திற்கு உட்சேர்ப்பதற்கான அடிப்படை கல்வித்தகைமைகளாக தூயகணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் என்பவற்றுடன் விஞ்ஞான பாடங்கள் மூன்றில் (03) க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தலும் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச்சித்தி சகிதம் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

அல்லது

I.II மேற்படி அடிப்படை கல்வித் தகைமைகள் சகிதம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப கல்லூரியில் உரிய துறை தொடர்பாக தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (மூன்று வருட பகுதி நேர பயிற்சிப் பாடநெறி) அல்லது வரைகலை தொடர்பான ஒரு வருட முழுநேர பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

II உள்ளக விண்ணப்பதாரிகளின் பொருட்டு.-

மொழி அல்லது இலக்கியம், கணிதம், மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு திறமைச் சித்திகள் சகிதம் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைய வேண்டுமென்பதுடன் உரிய துறையில் 10 வருட அனுபவம் பெற்றிருப்பவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அல்லது

மேற்படி I.II இல் குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுடன் தொடர்புடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றுள்ள திணைக்களத்தின் பணியாளர்களுக்கிடையில் திணைக்களப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் பயிற்றுவிக்கும் தரத்திற்கு உட்சேர்க்கப்படும். இதற்காக குறைந்தபட்சம் பயிற்சி பெற்ற ஊழியர் தரங்களில் அதாவது வகுப்பு I தரம் II இல் ஐந்து வருடம் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**குறிப்பு**.- திறந்த போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்பவியல் சேவையில் பயிற்சிபெறும் தரத்திற்கு தகைமை பெறுபவர்கள் அதாவது -

(i) 4 (ஈ) பந்தி இலக்கம் I. I இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பத்தாரிகள் தொடர்பில் சேவைக்கு ஏற்புடையதான பாடவிதானத்தின்படி பெற்றுக்கொள்ளும் இரண்டு வருடங்களிலான கோட்பாடு மற்றும் செய்முறை அடிப்படையிலான பயிற்சி என்பனவற்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து உரிய பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் வகுப்பு II தொகுதி 'ஆ' விற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

(ii) 4 (ஈ) பந்தி இலக்கம் I. II இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தொடர்பில் சேவைக்கு ஏற்புடையதான பாடவிதானத்தின் படி பெற்றுக்கொள்ளும் ஒரு வருடத்திலான கோட்பாடு மற்றும் செய்முறை அடிப்படையிலான பயிற்சி என்பனவற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் வகுப்பு II தொகுதி 'ஆ' விற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

(iii) இரண்டு வருடங்களுக்கு மேலான பயிற்சி தேவைப்படும். ஏதேனும் விசேட சேவைகள் இருப்பின் அந்த மேலதிக பயிற்சிக் காலம் பகுதியை கவனத்தில் கொள்ளும் பொருட்டு மேலதிகமாக பயிற்சிப்பெற்ற ஒவ்வொரு வருடங்களுக்கும் ஒரு சம்பள ஏற்றத்தை வழங்குதல் என்ற அடிப்படையில் பயிற்சியின் இறுதியில் வகுப்பு II தொகுதி 'ஆ' விற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், மேலதிக பயிற்சிபெற்ற காலப்பகுதியை வகுப்பு II தொகுதி 'அ' விற்கு தரமுயர்த்து வதற்காக கவனத்தில் கொள்ளப்படும் காலப்பகுதிக்கு கணக்கெடுக்கப்படும்.

(iv) மேற்படி (i) மற்றும் (ii) இன் கீழான பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பின், அவர்களுக்கு தமது பயிற்சிக் காலப்பகுதியை 06 மாதங்களுக்கு மேற்படாத வண்ணம் நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்புண்டு அவ்வாறு நீடித்துக் கொள்ளப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீள நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

**05. சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :-**

5.1 இன விகிதாசாரம், திறமை என்பனவற்றின் அடிப்படையில் அமைந்த 15/90 ஆம் இலக்க மற்றும் அதனோடிணைந்த அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சை பெறுபேறுகளின் படியும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் நியமனங்கள் வழங்கப்படும்.

5.2 (அ) ஆட்சேர்ப்பு வகுப்பான வகுப்பு II தொகுதி (ஆ) இன் வெற்றிட எண்ணிக்கையில் 70% வெளிவாரி விண்ணப்ப தாரிகளிடமிருந்தும் 30% தகைமைபெற்றுள்ள திணைக்கள ஊழியர்களிடமிருந்தும் போட்டிப் பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும்.

(ஆ) ஆயினும் பந்தி 06.02 இல் குறிப்பிட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளை கொண்டுள்ள உள்ளக விண்ணப்பதாரிகள் திணைக்களங்களில் இல்லாதவிடத்து மட்டுமே மிகுதியான வெற்றிடங்களுக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்ப தாரிகளை நியமனம் செய்து கொள்ளலாம்.

5.3 *வெளிவாரி விண்ணப்பதாரிகள்.*- அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மற்றும் அல்லது பத்திரிகை அறிவிப்பின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியுள்ள விண்ணப்ப தாரிகள் போட்டிப் பரீட்சையில் அமர்த்தப்படுவர். அப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதி யானோர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாதென்பதுடன் தகைமைகள் மட்டும் பரிசீலனை செய்யப்படும். தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

5.4 *உள்ளக விண்ணப்பதாரிகள்.*- திணைக்கள அறிவிப் பொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சையில் அமர்த்தப்படுவர். அப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானோர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாதென்பதுடன் தகைமைகள் மட்டும் பரிசோதனை செய்யப்படும். பாட விதானமும் பரீட்சைத் திட்டமும் இணைப்பு I இல் காட்டப்படும் தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் குறைந்தபட்சம் 35% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) திணைக்கள ஊழியர்கள் திணைக்களப் பரீட்சைப் பெறுபேறுகளின் பேரில் பயிற்றுவிக்கும் தரத்திற்குத் தெரிவுசெய்யப்படுவர். அவர்கள் ஒரு வருடகாலப் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரிகள் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II தொகுதி 'ஆ' விற்கு ஆட்சேர்க்கப்படுவர்.

(ii) இவ் அலுவலர்கள் பயிற்றுவிக்கும் தரத்தின்போது தாம் முன்னராக வகித்த சம்பள அளவுத் திட்டத்தி லேயே மேலும் தங்கி இருத்தல் வேண்டுமென்பதுடன் பயிற்சி பாடநெறியின் இறுதியில் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் வரை இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் ஆட்சேர்ப் புச் செய்யும் தரத்தில் ஆரம்ப சம்பளபடி நிலைக்கு சமமான ஆண்டுப் படியொன்று அவர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும். பயிற்சி பெறும் காலத்தில் அத்தரத்தில் திருப்திகரமாக உள்ள அலுவலர்கள் தொடர்பில் இரண்டாம் வருடத்தில் தாம் இதுவரை இருந்து வந்த சம்பள அளவுத்திட்டதிலேயே உயர் சம்பள படி நிலையில் அமர்த்தப்படுவதுடன் படி (allowance) தொடர்ந்து செலுத்தப்படும். பரீட்சையைத் திருப்திகரமாகப் பூரத்தி செய்தபின்னர் 2000.03.02 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் திருத்திய தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் மாற்றியமைக்கப்படும்.

(iii) தொடர்புடைய பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பின் அவர்கள் 6 மாதங்களுக்கு மேற்படாத வண்ணம் தமது பயிற்சிபெறும் காலத்தை நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்புண்டு. அவ்வாறு நீடித்துக் கொண்ட காலப்பகுதியின் இறுதியில் மீள நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் மீளவும் அவர்களது முன்னரான பதவிகளுக்கு விடுவிக்கப் படுவர்.

5.5 உள்வாரி வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கான போட்டிப் பரீட்சையானது இவற்றைக் கொண்டிருக்கும்.-

| | பாடங்கள் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 |
| (2) | தொழில்நுட்பவியல் பகுதி I - கணிதம் | 2 1/2 மணித்தியாலம் | 100 |
| (3) | தொழில்நுட்பவியல் பகுதி II - பௌதீகவியல் | 2 1/2 மணித்தியாலம் | 100 |

6. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதாகும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர், அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- (1) தகுதிகாண் நிலைக்காலம் 03 வருடங்களாகும்.

(2) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இல் பந்தி இலக்கங்கள் 10 தொடக்கம் 12 வரையிலான ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

8. விண்ணப்பங்கள் பின் குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) க. பொ. த. (சா. த.) சான்றிதழ், க. பொ. த. (உ.த.) சான்றிதழ் மற்றும் தொழில்நுட்பவியல் சான்றிதழ்கள்.

(2) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் (கல்வி நோக்கத்திற்காக வழங்கப்பட்ட ஞானஸ்தான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(3) அண்மையில் பெற்றுக்கொண்ட 03 நற்சான்றிதழ்கள் (இதில் ஒரு சான்றிதழ் தாம் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்தும் இன்னுமொன்று தாம் வதியும் பிரதேசத்தின் கிராம அலுவலரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்)

**குறிப்பு**.- மேற்படி சான்றிதழ்களின் பிரதிகள் மீள கையளிக்கப்பட மாட்டாது.

9. அரச மாகாண மற்றும் நியதிச் சட்ட சபை நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களங் களிலுள்ள தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

10. சகல விண்ணப்பத்தாரிகளும் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் விதிக்கப்படும் இடத்தில் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சைக்கும் நேர் முகப்பரீட்சைக்கும் தமது தனிப்பட்ட செலவில் பங்குபற்றுதல் வேண்டும்.

11. சேவை தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டில் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விசேடமாக தற்போது புதிய கருத்திட்டங்களுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள கஷ்டப் பிரதேசத்துக்கு இணைக்கப்படுவதுடன் அப் பிரதேசங்களில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் சேவையாற்றுதல் வேண்டும்.

12. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் விடயமொன்று பொய்யானவை அல்லது பிழையானவையென, தெரிவு செய்வதற்கு முன்னர் அறியவருமிடத்து விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும். நியமனம் செய்த பின்னர் பிழைகள் அறியவருமிடத்து எதுவித நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து நீக்கப்படும்.

13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்படும் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்திலுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மற்றும் தேவைப்படும் பொதுவான தகைமைகள் என்பவற்றின் பால் கவனம் செலுத்தப்படும்.

14. இந் நிபந்தனைகளில் வெளிப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் தீர்மானிக்குமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பி. எம். எஸ். சமரசேகர,
பொறியியலாளர்,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2007.09.28.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சு**

*நீர்ப்பாசனத் திணைக்களம்*

*இலங்கை தொழில்நுட்ப சேவை வகுப்பு II "ஆ" இற்கான வேலை மேற்பார்வையாளர் பதவி*

01.(அ) முழுப் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

02.(அ) தபால் முகவரி :----.
(ஆ) நிரந்தர முகவரி :----.

03. வதிவிட மாவட்டம் :----.

04. பிரதேச செயலாளர் பிரிவு :----.

05. பால் (ஆண்/பெண்) :----.

06. மொழி மூலம் : சிங்களம் ☐ தமிழ் ☐

07. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்று இணைக்கவும்):-

(அ) ஆண்டு :----. மாதம் :----, திகதி :----.

(ஆ) பிறந்த இடம் :----.

(இ) 30.11.2007 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

08. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

09. தொலைபேசி இல. :-
அலுவலகம் :----, வீடு :----, கையடக்க தொலைபேசி :----.

10. நீர் ஒரு இலங்கைப் பிரஜையா ? : ஆம் /இல்லை

இனம் சிங்களவர் ☐ முஸ்லிம் ☐
இலங்கைத் தமிழர் ☐ மலாயர் ☐
இந்தியத் தமிழர் ☐ பறங்கியர் ☐
ஏனையோர் ☐

11. கல்வித் தகைமைகள் (சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை இணைக் கவும்) :-

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சை (பின்வரும் தகவல்களைத் தரவும்):

ஆண்டு :----,
சுட்டெண் :----,
பாடங்கள் : (விசேட சித்தி, மிகச்சிறந்த சித்தி, திறமைச்சித்தி, சாதாரண சித்தி பற்றிக் குறிப்பிடவும்)

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

விஷேட சித்தி............. மிகச் சிறந்த சித்தி .............
திறமைச் சித்தி............. சாதாரண சித்தி .............

மொத்தம் .............

(II) க. பொ. த. (உ. த.) பரீட்சை பின்வரும் தகவல்களைத் தரவும்.

ஆண்டு :----.
சுட்டெண் :----.

பாடங்கள் : (அதி விசேட சித்தி, விசேட சித்தி, திறமைச் சித்தி மற்றும் சாதாரண சித்தி என்பவற்றைக் குறிப்பிடுக) :-

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 2. | |
| 3. | | 4. | |

12. தொழில்நுட்பத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 1999.08.23 ஆந் திகதிய இலக்கம் 1094/ 2 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் தயவு செய்து கற்கை நெறியின் பெயரையும் தொழில்நுட்பக் கல்லூரியின் பெயரையும் தருக :---
----------------------------------------------------

13. உரிய துறையில் பெற்றுக்கொண்ட அனுபவம் :-

| நிறுவனம் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |

14. நீர் முன்னர் ஏதாவது திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றியிருப்பின் :-

நீர் ஏன் இராஜினாமா செய்தீர் / விட்டுவிலகினீர் / தொடரா மலிருந்தீர் / விலக்கப்பட்டீர் என்பதைக் குறிப்பிடுக :----.

15. தற்போது ஏதேனும் தொழிலிலிருப்பின் விபரம் தருக :-

(அ) பதவி :----.
(ஆ) நிறுவனம் :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) பதவியின் தன்மை :----.
(உ) நீர் ஒரு அரச துறையில் உத்தியோகத்தராயிருப்பின் நீர் திருப்தியான சேவையைப் பெற்றீரா ? :----.

16. நீர் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் குற்றத்தையும் விதிக்கப்பட்ட தண்டனையையும் குறிப்பிடுக :----.

17. நீர் நன்னடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட 03 நபர்களினதும் பெயர்கள், நிலவரம், முகவரி, ஆகியவற்றையும் தருக :----.

18. மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என உறுதிகூறுகின்றேன். மேலுள்ள விண்ணப் பத்தில் ஏதேனும் பொய்யான, பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் பதவிக்கு தெரிவு செய்வதற்கு அது தகைமையற்றது என நான் அறிவேன். ஆட்சேர்ப்புக்கு பின்னர் அவை தெரியவரின் எவ்வித நஷ்டஈடுமின்றி பதவிக்காலம் முடிவடைவதற்கு இது போதுமானது என அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரின் சிபாரிசு**

இவ்விண்ணப்பதாரர் திரு./ திருமதி / செல்வி ................................ ......... அவர் இந்த திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் பணிபுரிகிறார் எனவும் அவரது நடத்தை திருப்திகரமானது எனவும் அப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நிபந்தனைகளைக் கொண்டுள்ளார் எனவும் உறுதி கூறுகின்றேன். மேலும் அவர் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்க முடியும்/ விடுக்க முடியாது எனவும் குறிப்பிடுகின்றேன்.

----,
திணைக்கள / கூட்டுத்தாபன / அதிகாரம் பெற்ற /
தலைவர் கையொப்பம்
(அலுவலக முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10-561

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2007

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமமானது)

**ஒழுங்குவிதிகளும் பிரமாணங்களும்.**- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். 2007 ஆம் ஆண்டிற்கான பரீட்சை 2008, ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன.

**2. பரீட்சை நிலையங்கள்.**- இணைப்பு 2 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத போது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. ஊடக மொழி.**- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

**4. தகைமைகள்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் அல்லது 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல் ;

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல் ;

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள்.

**குறிப்பு.**- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரி னால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவுசெய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், மத்ரஸாக்கள் பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பிவைக் கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2007.11.02 ஆந்திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவ தோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2007.11.16 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை
(விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக் கப்படமாட்டாது.)"

5.5 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க இறுதிச் சான்றிதழ் பரீட்சை-2007" எனவும், விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. பரீட்சைக்கட்டணம் ரூபா 60 ஆகும். முதன் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

6.1 கட்டணம் செலுத்தும் முறை.- உரிய தொகையை அஞ்சல கத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத்தவறும் பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப் பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக்கல்லூரி அதிபர், வருட மொன்றிற்கு ரூபா 2,37,060 க்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தி யோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு (7) ஏழு தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர் பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயர் ;

(இ) முழுப் பெயரும் விலாசமும் ;

(ஈ) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;

(உ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த தபால் நிலையம் ;

(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்குக் கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக் கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Passport) ;

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்** :

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடையும் பரீட்சார்த்தி கள் மட்டுமே இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர் .

ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் மூன்று வருடத்துக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.2 *பரீட்சை முடிவுகளை வெளியிடல்*.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. **விடைத்தாள்கள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும் இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இட மளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2007.10.05

## *இணைப்பு - 01*

## பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்

(2004 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது) இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தி யாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.

### முதலாம் வினாப்பத்திரம்

1. அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங் களும்) அரபு மொழியும் :

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள் :

* அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
* ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும் ஷிர்க்கும் :

* ஈமானும், குப்ரும்
* ரித்தத், நிபாக்
* அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
* சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
* ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
* சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
* ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
* இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
* துணை மூலதாராம் என்ற வகையில் இஜ்மா
* துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
* பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி :

* உறுப்பமைய எழுதுதல்
* சிறு வாக்கியங்களை எழுதுதல்
* இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அரபுச் சொற்களை எழுதுதல்
* முக்கியமான ஸூறாக்களையும் ஆயத்துக்களையும் ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்

2. *அல்பிக்ஹுல் இஸ்லாமி-இஸ்லாமிய சட்டநெறி :*

2.1 இபாதத் பற்றிய விளக்கம் :

* இபாதத்தின் பிரிவுகள்
* தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும் :

* நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
* நீரும் அதன் வகைகளும்
* வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத் :

* முக்கியத்துவம்
* விதிமுறைகள்
* திரட்டலும் விநியோகமும்
* ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும் செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு :

* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ் :

* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ் நிறைவேற்றும் முறை :

* பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
* பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாகச் செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம் :

உழைப்பின் முக்கியத்துவம்

பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்)

ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ-ம் : இரவல், வாடகை)

வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச் சொத்து, உயில் சொத்து, வாரிசுச் சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை :

நிகாஹின் விதிமுறைகளும் பயனும்

குடும்ப வாழ்வு

கணவன் - மனைவி

பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்

தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத் :

ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

3. ஸீராவும் தாரீகும் :

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நட்டின் சமய, சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்-

நுபுவ்வத்திற்கு முந்திய வாழ்க்கை

* குடும்பம், பரம்பரை
* இளமைப்பருவம்
* நற்குணம்
* திருமணம்

நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை

* நுபுவ்வத் கிடைத்தல்
* இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
* மிஃராஜ்
* ஹிஜ்ரத்

மதீனா வாழ்க்கை

* சமூக அரசியல் செயற்பாடு
* தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன் படிக்கைகளும்
* இஸ்லாம் பூரணத்துவம் பெறல்
* ஸஹர்பாக்களின் அந்தஸ்தும் இஸ் லாத்திற் கானஅவர்களது பங்களிப்பும்
* குலபாஉர் ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
* உமையா, அப்பாசியா ஆட்சிக்காலம்
* பைத்துல் முகத்தஸ் - வரலாறு
* இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
* முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
* பின்வருவோர் பற்றிய வரலாறு
* இமாம் புஹாரி (ரஹ்)
* இமாம் ஷாபிஈ (ரஹ்)
* இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
* இமாம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
* இமாம் ஷாதுலி (ரஹ்)

4. அக்லாக் (இஸ்லாமிய ஒழுக்கவியல்) :

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் :

* அக்லாக் பற்றிய விளக்கம்
* ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
* அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
* உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா

* வரஉ, ஸூஹ்த்
* முராகபா, முஹாஸபா
* ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை

* தியாகம்
* நன்றியுணர்வு
* பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக்கொடுத்தல், மன்னித்தல்
* பணிவு
* நேரம் பேணுதல்
* அவயங்களைப் பேணுதல் நாவு, கண், காது, பாலுறுப்பு
* பிறரை மதித்தல்
* நீதியும் நேர்மையும்
* இளைஞர் - யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப்பண்புகள்
* ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கிவாழல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

*இணைப்பு - 02*

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்**

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 |
| கொழும்பு (மத்தி) | 01 | |
| பம்பலப்பிட்டி | 02 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 |
| பாணந்துறை | 07 | |
| களுத்துறை | 08 | |
| அளுத்கமை | 09 | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 |
| வெலிகமை | 11 | |
| மாத்தறை | 12 | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 |
| மாவனல்லை | 14 | |
| வரகாபொலை | 15 | |
| கன்னத்தோட்டை | 16 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 |
| நுரைச்சோலை | 21 | |
| புத்தளம் | 22 | |
| சிலாபம் | 23 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 |
| கதுறுவெல | 27 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 |
| கண்டி | 29 | |
| நாவலப்பிட்டி | 30 | |
| தெல்தொட்டை | 31 | |
| கெலிஓயா | 32 | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 |
| எஹலியகொடை | 34 | |
| பலாங்கொடை | 35 | |
| **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| திஹாரிய | 03 | |
| மாபோல | 04 | |
| மல்வானை | 05 | |
| நீர்கொழும்பு | 06 | |
| **காலி மாவட்டம்** | | 04 |
| காலி | 10 | |

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | | 06 |
| ஹம்பாந்தோட்டை | 13 | |
| **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| குளியாப்பிட்டி | 17 | |
| குருநாகல் | 18 | |
| மெல்சிரிபுர | 19 | |
| பொல்கஹவெல | 20 | |
| **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| அநுராதபுரம் | 24 | |
| கெக்கிராவை | 25 | |
| கலம்விதுனுவெவ | 26 | |
| **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| மாத்தளை | 28 | |
| **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| நுவரெலியா | 33 | |
| **பதுளை மாவட்டம்** | | 16 |
| பதுளை | 36 | |
| வெலிமடை | 37 | |
| **மொணறாகலை மாவட்டம்** | | 17 |
| பிபிலை | 38 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 |
| காத்தான்குடி | 43 | |
| ஏறாவூர் | 44 | |
| வாழைச்சேனை | 45 | |
| **வவுனியா மாவட்டம்** | | 21 |
| வவுனியா | 49 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 |
| முல்லைத்தீவு | 51 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 |
| யாழ்ப்பாணம் | 53 | |
| **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| அக்கரைப்பற்று | 39 | |
| பொத்துவில் | 40 | |
| கல்முனை | 41 | |
| சம்மாந்துறை | 42 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|
| **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| மூதூர் | 46 | |
| கிண்ணியா | 47 | |
| திருகோணமலை | 48 | |
| **மன்னார் மாவட்டம்** | | 22 |
| மன்னார் | 50 | |
| **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| கிளிநொச்சி | 52 | |

### *இணைப்பு - 03*

### பரீட்சைப் பாடத்திட்டம் - (2004 ஆம் ஆண்டுமுதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது)

இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.

1. ***முதலாம் வினாப்பத்திரம்*** - *அகீதாவும் ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலதாரங்களும்) அரபு மொழியும்*

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

**பகுதி** I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்) :

இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளையும் பிரதான சட்ட மூலாதாராங்களையும் இனங்காணல்.

(அ) அர்கானுல் ஈமான்

(ஆ) அகீதாவின் விளக்கம்

(இ) அல் குர்ஆன்

(ஈ) அல்-ஹதீஸ்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1.1(அ) சுருக்க விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)

(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

**பகுதி** II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :

தௌஹீதினையும் அதற்கெதிரான விடயங்களையும் துணை மூலதாரங்களையும் தெளிவாக விளங்குதல் :

(அ) தௌஹீதும் அதன் வகைகளும்

(ஆ) தௌஹீதுக்கு எதிரான கொள்கைகள்

(இ) இஜ்மாவும் கியாஸும்

(ஈ) இஜ்திஹாத்தும் முஜ்தஹித்களும்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவு வினாக்கள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 5 புள்ளிகள் வீதம் (5 x 4 = 20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - புறவய வினாக்கள் (40 புள்ளிகள்)

சட்டமூலாதாரங்களின் பிரயோகங்களும் அவற்றைப் பின்பற்றி ஒழுகுதலும் :

(அ) அல்குர்ஆன், அல்ஹதீஸ் வரலாறு

(ஆ) அல்குர்ஆனின் முக்கிய ஸூறாக்களையும், ஸூறாவுடன் தொடர்பான அரபுச் சொற்களையும் அரபியில் எழுதுதல்

(இ) பிரதான நான்கு மத்கபுகளும் அவற்றின் இமாம்களும்

(ஈ) இஜ்திஹாதும் ஏனைய முஜ்தஹித்களும்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பிய இரு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்பட வேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

2. **இரண்டாம் வினாப்பத்திரம்** - ***அல்பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)***

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்)

ஐம்பெரும் கடமைகளையும், ஏனைய அன்றாட நடவடிக்கைகளையும் இபாதத்தாக அமைத்துக்கொள்ளல்.

(அ) தஹாரத்தும் நஜீஸும்

(ஆ) ஐம்பெரும் கடமைகள்

(இ) ஏனைய இபாதத்கள்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. (அ) பொது விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)

(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :

முஆமலாத், முனாககாத், ஜினாயாத் போன்ற செயற்பாடுகளை இபாதத்துக்களாக்கிக் கொள்ளல்.

(அ) ஐம்பெரும் கடமைகள்

(ஆ) ஸுன்னத்தான இபாதத்துகள்

(இ) திருமணமும் குடும்ப வாழ்வும்

(ஈ) முஆமலாத்

(உ) ஜினாயாத்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடையெழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 05 புள்ளிகள் வீதம் (4 x 5 = 20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :

பர்ளான, ஸுன்னத்தான இபாதத்துகளின் பயன்களையும் தத்துவங்களையும் தெரிந்து செயற்படல்

(அ) ஐம்பெரும் கடமைகள்

(ஆ) தொழில்சார் நடவடிக்கைகள்

(இ) குற்றங்களும் தண்டனைகளும்

(ஈ) திருமணமும் குடும்பவாழ்வும்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பிய இரு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்படவேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

*3.* ***மூன்றாம் வினாப்பத்திரம் - ஸீறாவும் தாரீக்கும் (நபி (ஸல்) வரலாறும் ஏனைய வரலாறும்)***

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்)

நபி (ஸல்) அவர்களினதும், ஸஹாபாக்களினதும் ஏனைய வரலாறுகளையும் தெரிந்து கொள்ளல்.

(அ) ஜாஹிலிய்யாக் கால சமய, சமூக நிலை

(ஆ) நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு

(இ) ஸஹாபாக்கள் இஸ்லாத்துக்கு ஆற்றிய பங்களிப்பு

(ஈ) உமையா, அப்பாஸியக் காலம்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் சகல பரீட்சார்த்திகளும் விடையளிப்பது அவசியம். இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(அ) சுருக்க விடையெழுதுதல் - 10 வினாக்கள் (10 புள்ளிகள்)

(ஆ) பல்தேர்வு வினா - 05 வினாக்கள் (05 புள்ளிகள்)

(இ) இடைவெளி நிரப்புதல் - 05 வினாக்கள் (05 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் - 20)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)

நபி (ஸல்) அவர்களினதும் அல்குலபாஉர் ராஷிதீன்களினதும் பங்களிப்புகளை அறிதல்

(அ) நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வு

(ஆ) நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வு

(இ) குலபாஉர் ராஷிதீன்கள் வரலாறு

(ஈ) பல்வேறு துறைசார் இமாம்களின் பங்களிப்பு

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளைக் கொண்டது. ஒரு பிரிவுக்கு 5 புள்ளிகள் வீதம் 5 x 4 = 20 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :

நபி (ஸல்) அவர்கள் காட்டிய இஸ்லாமிய சமூக அரசியலின் அவசியத்தை உணரச் செய்தல்

(அ) நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

(ஆ) அல்குலபாஉர் ராஷிதீன்களின் அரசியற் பங்களிப்பு

(இ) முஸ்லிம்களின் அறிவியற் பங்களிப்பு

(ஈ) இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், பங்களிப்பும்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களிலிருந்து எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் முழுமையாக 20 புள்ளிகள் வழங்கப்படும். மொத்தம் 2 x 20 = 40 புள்ளிகள்

*4.* **நான்காம் வினாப்பத்திரம்** - *அல்-அக்லாக் (இஸ்லாமிய ஒழுக்கவியல்)*

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - நேர் (Objective) வினாக்கள் (20 புள்ளிகள்) :

(அ) ஒழுக்கவியல் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்

(ஆ) தக்வா

(இ) ஈகை

(ஈ) இஸ்லாமிய நீதி

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களுக்கும் அனைவரும் விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து புள்ளிகள் வீதம் இருபது (20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :

ஈமானும் நற்குணங்களும்

ஆன்மாவுடன் தொடர்புடைய பண்புகள்

சமூக உறவுடன் தொடர்பான பண்புகள்

நேரம் பேணல், அவயவங்களைப் பேணுதல்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டவை. ஒரு பகுதிக்கு 05 புள்ளிகள் வீதம் 5 x 4 = 20 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - கட்டுரை வடிவிலான வினாக்கள் (40 புள்ளிகள்)

(அ) இஸ்லாமிய நற்பண்புகள் ஊடாக மனிதநேயம் வளர்ச்சி பெறல்

(ஆ) இபாதத்துக்கள் ஊடாக நற்பண்புகள் வெளிப்படல்

(இ) படைப்புகள் மீது அன்பு கொள்ளல்

(ஈ) இஸ்லாமிய நீதிமுறை

(உ) இளைஞர் யுவதிகளிடம் காணப்படவேண்டிய ஒழுக்கப் பண்புகள்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு இருபது புள்ளிகள் வீதம் இரண்டு வினாக்களுக்கு நாற்பது புள்ளிகள்.

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கத்தோலிக்க மறைப் பாடசாலை

## இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2007

**சட்ட விதிமுறைகள்:**

1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை என அறிமுகப்படுத்தப்படும் இப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளரினால் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை முழுவதும் வருடாவருடம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்.**- நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

3. **மொழி மூலம்.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடைபெறும்.

4. **தகுதி.**- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப் பாடசாலையின் இறுதி நற்சான்றுப்பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ; அல்லது

4.2 தேசிய பொதுக்கல்வி நற்சான்றுப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தரராதர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந் தர வகுப்பில் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு.**- I. இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல் :**

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப்பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5.6 இல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2007.11.02 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பிட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக் கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக ரூபா 60.00 செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்கான அறிவுறுத்தல்கள் மறைப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அடுத்த பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2007.11.16 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் முகவரி சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,<br>
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை - (உரிய வருடம்) " என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் சான்றிதழ் பற்றிய தகுதியை மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத்தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

6. **பரீட்சை கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 60.00 ரூபாவாகும். இருப்பினும், முதன்முதலில் தோற்றும் விண்ஸ்பபதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை.

6.1 *பரீட்சைக் கட்டணம் செலுத்தல்.*- விண்ணப்ப தாரர் அனை வரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபாற் கந்தோரில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று. (முத்திரை, காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

6.2 *பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்.*- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. ***அனுமதி அட்டை.***- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரி யரூடாக அனுமதி அட்டை அனுப்பப்படும்.

7.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்தி களும் தம்மை அறிமுகப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையை அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய வேறு அத்தாட்சிப்பத்திரத்தை வைக்க வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிட்டு பரீட்சைக்குத் தோற்றும் முதல் தடவையிலேயே பரீட்சை நிலைய அதிகாரியிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்கா விட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நடுநிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நடுநிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவர் பரீட்சையிலிருந்து நீக்கப்படு வார்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள கையொப்பம் மறைப்பாட சாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரி யரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க் குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) முழுப் பெயரும் முகவரியும் ;
(4) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;
(5) விண்ணப்பப்பத்திரம் தபாலிலிடப்பட்ட தபாற் கந்தோர் ;
(6) விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;
(7) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபாற்கந்தோர் ;

8. ***அடையாள அட்டை.***- ஒவ்வொரு வினாத்தாளுக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடை யாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம்:

8.1 தேசிய அடையாள அட்டை;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

9. சித்தி பெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்.- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள் களிலும் ஒரே முறையில் சித்திபெற வேண்டும்.

9.1 இத்தேர்வில் நூன சித்தி வழங்கப்படமாட்டாது
9.2 ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படும். சித்தி பெறும் தரம், குறியீடு கீழே உள்ளவாறு அமையும்.

| ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.3 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **நற்சான்றிதழ் பத்திரம்**..- இத்தேர்வில் சித்திபெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை.-**

மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி விடைத்தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகைபற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத் தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளரினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது ஆகும்.

அநுர எதிரிசிங்க,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2007.10.05

**கத்தோலிக்க மறை**

*(2007 இலிருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)*

இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 03 மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினாத்தாள்களைக உள்ளடக்கியது.

*வினாத்தாள் I*

**கத்தோலிக்க விசுவாசம்**

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* மீட்பர்
  - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1:1 - 14):
  - இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5,6,7)
  - உவமைகள் (மத்தேயு 13:1-52)
  - புதுமைகள் (யோவான் 11:38-45, லூக்கா 8 :26 -39, மாற்கு 2 : 1 -12, 4:35-41)

* தூய ஆவியானவர்
  - செயற்பாடுகள் (யோவான் 7:37-39, 14 : 15 -31, 16: 5-15, 1 கொருந்தியர் 12 : 4 -11)

* கத்தோலிக்க திருச்சபை
  - ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக

1 உரோமையர் 12 : 4 - 21
1 கொரிந்தியர் 12 : 12 - 31

  - திருச்சபையின் ஆட்சித்திட்டம்
  1அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம் கொண்ட பணி
  - துறவற பணி
  - பொதுநிலையினர் பணி

* மனித வாழ்வின் மாற்றம்
  - மனிதனின் இறுதி நிகழ்வு
  - புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21:1-4)

*வினாத்தாள் II*

**கத்தோலிக்க வாழ்விற்கான வழி**

(ஆ) கத்தோலிக்க வாழ்விற்கு வலிமை தரும் திருவழிபாடு.

* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்.
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட் சாதனங்கள் (பொதுவான பண்பு)

* தொடக்க திருவருட்சாதனங்கள்

  * திருமுழுக்கு
  * உறுதிப்பூசுதல்
  * திவ்விய நற்கருணை
  * சுதத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள்
  * ஒப்புரவு
  * நோயிற்பூசுதல்

* பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட்சாதனங்கள்
* குருத்துவம்
* மெய்விவாகம்

*வினாத்தாள் III*

**கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு**

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5 :21 - 47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) லூக்கா 6 :17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனச்சாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்ற வேண்டிய நற்பழக்கங்கள்.
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்.

வினாத்தாள் IV

**செப வாழ்வு**

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்.
* பழைய ஏற்பாட்டில் செபம்
  - ஆபிரகாம்
  - மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
  - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  - செபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11:1 -13)

* திருச்சபை வாழ்வில் செபம்
  - புகழ்தல்
  - நன்றி கூறல்
  - வேண்டுதல்
  - பரிந்துரை செபங்கள்
  - தியானம் மூலம் செபித்தல்
* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
  - உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
  - உம்முடைய அரசு வருக
  - உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
  - எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்.
  - எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பது போல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.
  - சோதனையில் எங்களை விழ விடாதேயும்
  - தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்.

* பல்வித பக்தி முயற்சிகள்
  - செபமாலை
  - நவநாட்கள்
  - திருமணித்தியாலம்

பயன்படுத்தக் கூடிய நூல்கள்

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்பிடம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  திருவழிபாடு
  இன்றைய உலகில் திருச்சபை
  கிறிஸ்துவின் திருச்சபை
  பொதுநிலையினரின் திருப்பணி

**1. அட்டவணை**

மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

**மாவட்டம் 01 - கொழும்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டிய | 103 |
| மொறட்டுவ | 104 |

**மாவட்டம் 02 - கம்பஹா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| றாகம | 208 |

**மாவட்டம் 03 - களுத்துறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 04 - காலி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 05- மாத்தறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 06 - அம்பாந்தோட்டை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 07- இரத்தினபுரி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 08 - கேகாலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 09 - புத்தளம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருனாகல்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருனாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அநுராதபுரம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அனுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலநறுவை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழுங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2443 |

10 - 676

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.